ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணு 2. சிலோன் 5 சதம் REGD NO 4642.

# திராவிட நாடு

மலர் 11. 17—8—52 இதழ் 7.

## காவல் சட்டம்—மீண்டும்!

"என்னைப் பாருங்கள்! எழுந்து நின்றுகூடப் பேச முடியவில்லை-வைத்திய விடுதியிலிருந்து நேரே வருகிறேன். இந்நிலைக்கு என்னை உண்டாக்கியது, எது தெரியுமா? இந்தக் காவல் சட்டம்தான். எத்தனை ஆண்டுகள் ஜெயிலில் கிடந்தேன்—தெரியுமா?"

"பாதுகாப்புச் சட்டமா இது? பாரீர், எமது கையினை! முறிந்து போயிருப்பது தென்படுகிறதே, இது, சர்க்கார் தந்த பரிசு. வேலூர் சிறையிலே அடைக்கப்பட்டிருந்தபோது, போலீஸ் தந்த தடியடியின் விளைவய்யா விளைவு!"

'நான் சட்டசபை உறுப்பினர். ஆனால் 4-ஆண்டுக் காலத்தில் 2½ ஆண்டுகள் சிறைக்குள்ளேயே, விசாரணையில்லாமல் பூட்டப்பட்டுக்கிடந்தேன்."

தழும்பு தாங்கிய உடல்களைக் காட்டினர்! சிறைவாச சித்திரவதைகளை விளக்கினர்! 'துப்பாக்கி முழக்கத்தால் துடித்துச் செத்த உயிர்களின் எண்ணிக்கை வேண்டுமா? ஊராள்வோரே' என்று, உலர்ந்த கண்களால்கேட்டனர். மெலிந்தஉடலோடு ஒருவர் இதை விளக்கி 'சொந்த அனுபவம்' எனக் கூறிப் பேச எழுந்தார்! நிற்க முடியவில்லை, அவரால்!! 'ஐயோ—நீங்கள் அமர்ந்தபடியே பேசுங்கள்' என்றார், சபாநாயகர். "ஐயா! இப்படியிருக்கக்காரணம் என்ன தெரியுமா—இப்போது சர்க்கார் கொண்டுவரும் கொட்டும் சட்டம்தான்" என்றார் அவர். 'ச்சு, ச்சு' என்றது, சபை! அந்த அனுதாபம் பிறர் காதுகளில் விழுந்துவிடலாகாதே எனும் ஆவலில் கைதட்டினர், காங்கிரஸ் நண்பர்கள்!! வாழ்வையே கடித்துவிட்ட பாம்பு அது. அதை மீண்டும் உலவவிடுவதா? மறுபடியும் காவல் சட்டம் வேண்டுமா? கருப்புச் சட்டம் அது! ஆட்கொல்லிச் சட்டம்!' என்றெல்லாம், கண்டனமாரி, குவிந்தது; காங்கிரஸ் எம். பிக்களில் சிலரும், இந்தக் கண்டனக் குரலைத் தெரிவித்தனர். டில்லி, கண்டிராத புயல்! நேரு துரைத்தனம் நினைத்தறியாச் சொல் அம்புகள்!! வார்த்தைகளால் மட்டும் வாதாடவில்லை, எதிர்க்கட்சியினர். சட்டத்தால் கொட்டப்பட்ட தமது உடல்களையே காட்டினர்! சட்டையை மடித்து முறிந்த கையைப் பாருங்கள் என்றார், நம்பியார். பார்லிமெண்டிலே மட்டுமல்ல—வெளியிலும் கண்டனம். 'கூடாது! இந்த ஆள் பிடிப்புச் சட்டம்!' என்று மக்களின் முழக்கம். அருணா ஆசப்அலிபோன்ற முன்னாள் தேசியத் தலைவர்கள், டில்லி தர்பாரின் வாயிலிலே நின்று, "வேண்டாமய்யா, இந்தக் காவல் சட்டம்" என்று வாதாடினர். ஆனால், காங்கிரஸ் எதேச்சாதிகாரமோ தனது ஆசையை நிறைவேற்றிக்கொண்டுவிட்டது.

தனக்கு எதிரியென்று தென்படுவோரையெல்லாம், கேள்வி முறையின்றி சிறைக்குள்தள்ளும், சட்டத்தை (Preventive Detention Act) நிறைவேற்றிக்கொண்டுவிட்டது. காங்கிரஸ் கைதூக்கிகள், கொடுமைக்கு 'பாமாலை' சூட்டி வணக்கம் செலுத்திவிட்டனர். 1954 டிசம்பர் முடியும் வரை. இனி எவரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் பிடித்து அடைக்கலாம். விசாரணையில்லாமலே போட்டு அடைக்கலாம்! சர்க்கார் செய்யலாம்!! 'இது தகுமா—நீதியா' என்று எவரேனும் கேட்டால, 'நாட்டின் பாதுகாப்புக்காகச் செய்யப்பட்ட நற்காரியம்' என்று அமைச்சர்கள் பதில் தந்துவிடலாம்.

அதைத்தானே கண்டோம், கடந்த ஐந்து ஆண்டுகளில்! தஞ்சையிலே நடைபெற்ற அட்டூழியங்கள், தெலுங்கானா தீச்செயல்கள், பெண்களின் கண்ணீர், பெற்ற தாய்களின் ஓலம்—இவைகளைக் கண்ணாரக் கண்டும், சட்ட சபையிலே எப்படி பேசினர், அமைச்சர்கள்! விழியில் நீரோடு, யாராவது ஒரு எதிர்க்கட்சிக்காரர் கேட்டால் உருட்டு விழியையும், மிரட்டுக் குரலையுமன்றோ காட்டினர்! அதே நிலை, மீண்டும், ஏற்பட வழி காட்டுகிறது, டில்லி.

"எதிர்த்து பேசுகிறான்,மன்னா!"

"துண்டித்துப் போடு, நாவை"

"தங்களாட்சியைக் கண்டிக்கிறான், இந்தக் கசடன்"

"அப்படியா! பிடி—அடி—தள்ளு"

"மக்களைக் கிளறுகிறான், இந்த மகோன்மத்தன்"

"விலங்கைப் பூட்டு—தொழுவத்தில் மாட்டு"


மதிகெட்ட மன்னர்களின் கொடுங்கோலை வர்ணிக்க, இத்தகைய-காட்சிகளை நாடகத்தில் காண்போம். அது, நாட்டில், இன்று! ஜனநாயகம் பேசும் தேசத்தில், இந்தத் திருக்காட்சிகள்!! அதுவும், புதுமை மலர்ந்து வரும், பொன்னுலை நோக்கிய நிமிர் பிடித்து அலைந்தமன்னாதி மன்னர்கள், பட்ட அவதியையும், வீழ்ந்த காட்சிகளையும், பிரெஞ்சுச் சரிதமும். ஆங்கில நாட்டு வரலாறும், நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. 'மன்னனே தெய்வம்!' என்று, மண்டியிட்டுக் கிடந்த, மக்களிடையே இந்த மனோநிலை உண்டாக்கிய காட்சியை அவைகள் செப்புகின்றன. கண் முன்னே கண்டோம், எழில் நாடாம் எகிப்தின் ராஜபாரம்பரைக் கேற்பட்ட கதியை! ஆனாலும் இங்குள்ள ஆளவந்தார்கள், 'அராஜக மன்னர்களின் பாணியில், சட்டமியற்றுகிறார்கள் — சரியா?' எனக் கேட்டால் சீறுகிறார்கள். நாட்டில் உலவவேண்டிய மனிதனைக் கூட்டிலடைக்கலாமோ? எனக்கேட்டால் குறும்பாகப் பதில் தருகின்றனர். கோலோச்சுகிறோம் எனும் மமதை போலும்! டில்லி பார்லிமெண்டிலே இந்தக் 'கருப்பு' சட்டத்தைக் கொண்டுவந்த கட்ஜுபிரான் கூறினாராம். "காவல் கைதிகள் சிறைகளில் மிகவும் கஷ்டப்படுவதாகவும், எவ்வித சௌகரியமும் தரப்படுவதில்லை என்று சிலர் கூறினர்கள். ஆனால் உண்மை என்ன தெரியுமா? காவற் கைதிகளுக்கு சிறைகளில் செய்து தரப்பட்டிருக்கும் வசதியை எண்ணும்போது ஜெயில் ஒரு மோட்சலோகம் என்று எண்ணுகிறோம்" என்று தெரிவித்திருக்கிறார். ஜெயில் ஒரு மோட்சலோகமாம்-கூறியிருக்கிறார் அமைச்சர்! அவரது கர்வத்துக்கு சரியான சம்மட்டி அடி தந்திருக்கிறார்—ஒரு உறுப்பினர். "சிறை சொர்க்கலோகம்மாதிரி தென்பட்டால், மந்திரி நாற்காலிகளைவிட்டு, ஒரு மாதம், அங்கு போயிருந்து பார்த்துவிட்டு வாருங்களேன்!"

நல்ல பதில்! அமைச்சர், ஏன், வாய்திறக்கிறார்? ஆத்திரமேலிட்டு, காரசாரமாக தமக்குத் தெரிந்த வார்த்தைகளையெல்லாம் எதிர்க்கட்சியினர் மீது வீசியிருக்கிறார். ஆட்கொல்லிச் சட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது, அரசாங்கம். காங்கிரஸ் சர்க்காரில், நாம் கண்டு வரும் காட்சிதானே, இது! பலத்த மெஜாரிடி கொண்டோரல்லவா? 'கைதூக்கு!' என்றதும் தூங்கிய கைகள் உயர்ந்தன!! கழுத்தில் கயிறுபோடும் சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது! இந்தக் காவல் சட்டத்தின்மூலம்விளைந்ததீமைகளை கடந்த காலம் செப்பியிருக்கிற காரணத்தால், இந்தமசோதாவின், ஒவ்வொரு பிரிவிலும் தமது பலத்த எதிர்ப்பை, எதிர்க் கட்சியினர் காட்டி வந்திருக்கிறார்கள். பாராட்டுகிறோம், இந்த, பண்பாளர்களை!

அவர்கள் அதற்கு எடுத்துத் தந்த விளக்கமும் சாதாரணமல்ல. கண்ணீரைக் காட்டினார்கள்! தாலியிழந்த மங்கைகளின் பட்டியலைத் தந்தார்கள்! 'என்ன அவசரம் இச்சட்டத்துக்கு?' என்று கேட்டார்கள். ஆனால், இது, எதற்கும்அசையவில்லை அகிம்சா அரசாங்கம். சட்டம்—வந்துவிட்டது! "காவல் சட்டத்துக்கு காரணம் சமுதாயவிரோதிகளை அடக்கவே" என்று, சண்டப் பிரசண்டமாகப் பேசினார், பிரதமர் பண்டிதர்.

"ஐயா! உங்கள் அப்பா மோதிலால் இதுபோன்ற சட்டங்களைக் கண்டித்து எழுதிய கட்டுரையைக் கேளும்" என்று, 'அந்தக் கால' காங்கிரஸ்வாதிகளின் உள்ளத்தை வெளிக்காட்டினார், ஒருவர். அமெரிக்கா முதலாளித்துவ தேசம்—கம்யூனிசத்தையே ஒழிப்பேன் என்று ஓங்காரக் கூச்சலிடும் பூமி. அங்கேகூட இல்லை, இதுபோன்ற சட்டம்! இங்குமட்டும் ஏன்?—என்று ஆத்திரத்தோடு கேட்டார். ஆனால், இது எதுவும், இந்தி வெறியர்களை தடுக்கவில்லை. சட்டம் வந்துவிட்டது! காவல் சட்டம் நிறைவேறும்போது, மஞ்சள் ஏகாதிபத்யவாதிகளின் பாசிச வெறிமட்டுமல்ல, உலகுக்கு வெளிப்பட்டிருப்பது. காங்கிரஸ் வீரர்கள் வளர்ந்து வரும் புதுமைகளைக் கண்டு கலங்குகிறார்கள் — தென்றலைத் தீயென நினைத்து, தம்மைத் தற்காத்துக்கொள்ள,

(2-ம் பக்கம் பார்க்க)




பிற்போக்குப் பித்து எனும் பீடமேறியிருக்கும் காங்கிரஸ் ஆட்சி, நிலப் பிரபுத்துவமெனும் கயிற்றால், விவசாயிகளைப் பிணைத்து வாட்டுகிறது! பல இடங்களில், விவசாயிகள் விரட்டப்படுகிறார்களென்பதை சட்டசபையினர் எடுத்துக்காட்டியும், தக்க முயற்சி எடுக்கவில்லை, ஆச்சாரியார் அரசாங்கம்!!

திராவிடநாடு

காஞ்சி] 17—8—52 [ஞாயிறு

# முப்பத்து எட்டு

★

24 ஆக இருந்தது 38 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. 'பாரத்' என்று மகுடம் சூட்டப்பட்டு, 'இந்திய நாடு' என்று அழைக்கப்படும் இந்த மாபெரும் உபகண்டத்தை ஆள்வோரின் தொகைதான் இந்த முப்பத்து எட்டு. அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், பார்லிமெண்டரி காரியதரிசிகள் எனும் 'படி'களில் இருப்போரின் எண்ணிக்கை தான் இது. எனினும், இத்தனை பேரும், இந்திய உபகண்டத்தின் ஆட்சி இயந்திரத்தின் முக்கிய உறுப்புகள். இவ்வளவுபேரும், மக்கள் தரும் வரிப்பணத்திலிருந்து, மாதா மாதம் பணத்தைக் கொட்டிக்கொண்டு போவர்கள். ஆயிரமாயிரமாக வாங்கும் 'அமைச்சு'க் குழுவுக்கு இத்தனைபேர் தேவைப்படுகிறது! முப்பத்து எட்டு!!

வெள்ளையன் இந்த நாட்டைப் பரிபாலித்த காலத்தில், இவ்வளவு பெரிய உபகண்டத்தை ஆள, அரை டஜன் ஆசாமிகள்தான் இருந்தார்கள். 1939-ல் இம்மாபெரும் பூமியை ஆண்ட 'நிர்வாகக் கவுன்சில்' உறுப்பினர்கள், ஆறே ஆறு பேர்! இப்போது முப்பத்தெட்டு பேர்!!

அமைச்சர்கள் தொகை அதிகரித்திருப்பதால், ஒவ்வொரு இலாகாவிலுமிருக்கும் உயர்தர உத்யோகஸ்தர்கள் தொகை குறைந்திருக்குமென்று எண்ணுதீர்கள். அது, அப்படியே இருக்கிறது. வெள்ளையன் வைத்துவிட்டுப்போன, சக்கரம்! அதே உத்யோகங்கள்!!

ஆனாலும் 'முப்பத்தெட்டு' தேவைப்படுகிறது.

இந்த அமைச்சர் குழுவிலிருக்கும் பெயர்களை நினைவில் வைத்துக்கொள்வதென்றால் எளிதல்ல. யார்யார் மந்திரிகள் என்பதை, நினைவில் வைத்துக்கொள்ள முடியாது! பட்டியல் நீள்கிறது!! 'குட்டி — பார்லிமெண்ட்' போல காட்சி தருகிறது, ஆளும் குழு!!

இந்த 'முப்பத்தெட்டும்' எதற்காக வென்றே விளங்கவில்லை! ஆள் அதிகரிப்பால் — அதுவும் கதர்குல்லாய்களால் — மூளைபலம் அதிகம் கிடைக்குமென்பதா? அப்படியென்றால், அது தேவையாகவாயிருக்கிறது. அங்கு! 'உம்' என்று உறுமினால், 'உடனே ஒரு மந்திரிப்பதவி! கிடைக்கிறது, டில்லி தர்பாரில்! கேள்வி கேட்டால் உடனே கிரீடம் சூட்டப்படுகிறது!! தொகை வளர்கிறது.

'தொகை' வளர்வதால் மட்டும், ஆட்சிச் சக்கரம், திறமையாகச் சுற்றிவிடவா முடியும்? முன்பிருந்த, அதே உத்யோகஸ்தர்களை வைத்துக் கொண்டு, புதிதாக முடியேந்துவோர், என்னென்ன செய்துவிட முடியும்? அப்படிச் செய்ய முடியுமென்றால்—குறைகளைக் கண்டு அமைச்சருக்குக் கூறி ஒத்துழைக்கும் திறமையுள்ளோர் தேவையென்றால் — அவர்களுக்கெல்லாம் உடனே பதவி தரவா முடியும்? பட்டியல் பெருகாதா! நீளாதா!!

அவ்விதம், குறைகளை எடுத்துக் கூற, பார்லிமெண்டுதான் ஒன்று இருக்கிறதே! பார்லிமெண்டால், நிர்வாகம் எப்படி ஒழுங்காக நடக்க இயலுமெனக் கேட்கலாம். அப்படியானால், நிர்வாகத்திற்கு புதிதாகச் சென்ற கதர் குல்லாய்க்காரர்கள் கௌரவ ஆலோசனைகளைக் கூறலாமே! எத்தனையெத்தனை, கமிஷன்களும் கமிட்டிகளும், இருக்கின்றன? இருந்தும் ஏன் இது குழந்தைக்குச் சாலரா தரும் காட்சியா! 'அனுபவியப்பா!' என்று யாவருக்கும் 'சான்ஸ்' தரும் நோக்கமா!!

"செச்சே! சுயநல லாபம் கொண்டோரோ யாம்?" என்று தேசிய நண்பர்கள் சீறுவாரேயானால், அவர்கட்கு ஒன்று உரைப்போம். நிர்வாகம் ஒழுங்காக நடைபெற முப்பத்தெட்டு தேவையென்றால் என்ன காரணம் இதற்கு? 'இமாசல முதல் குமரிவரை பரந்து கிடப்பதன்றோ நம் பாரத கண்டம்' என்று செப்புவீரா? அதனால்தான் அதிக எண்ணிக்கை தேவைப்படுகிறதென்றால், இவ்வளவு பெரிய நிலப் பரப்பை ஆள, ஏராளமான ஆட்கள் தேவை யென்றுதானே தென்படும். எண்ணிக்கையை அதிகம் வைத்து எத்தனை நாட்களுக்குத்தான் ஆண்டிட முடியும், இவ்வளவு பெரிய பிரதேசத்தை! 'முப்பத்தெட்டு' தேவைப்படுகிறதே முப்பத்தெட்டு!! இவ்வளவு பெரிய அமைச்சர் குழாம், தேவைப்படுவது—நிர்வாகத் திறமையில்லை என்று காட்டுவது மட்டுமல்ல, அவ்வளவு பேர் தேவைப்படுகிறது இவ்வளவு பெரிய பூமியை ஆள, என்று அல்லவோ காட்டுகிறது. நல்லாட்சி மலர, மந்திரிகள் தொகை அதிகமிருந்துவிட்டால் போதுமா! ஒழுங்கான ஜனநாயகம் மலரத்தான் இயலுமா!! 'பிரிவினை' யென்றால், சீறுவோரே, உமது சிந்தனைக்குத்தான், இந்த முப்பத்தெட்டு.

★

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக் கோட்டை கட்டிக்கொள்ள விரும்புகிறார்கள். காவல் சட்டம் எனும் ஏவல் நாய், கோட்டைக்கு வெளியில் நிறுத்தப்படுகிறது! 'கொட்டு—நடி'—என்று அதிகாரம் அளிக்கப்படுகிறது. கட்ஜு பேசியிருக்கிறார், "விவசாயப்புரட்சி ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சக்கூடிய நிலையில் நாம் இருக்கிறோம். இந்த நிலையைச் சமாளிக்க வேண்டிய வசதிகளோடு சர்க்கார் தயாராக இருக்க வேண்டும்" — இது, டில்லிபீடத்தின் பயம். அதனால், கோட்டை அமைத்துக்கொள்ள விரும்புகிறது. தனக்கு எதிரியாகத் தென்படுவோரையெல்லாம், பூட்டி சிறைக்குள்ளே தள்ளி, சுகமாக உலவலாம் என்று எண்ணுகிறது. சர்வாதிகார வெறியர்களுக்கு வரும், கடைசிகால ஆசை இது. ஆனால், டில்லி ஆதிபத்யத்துக்கு, ஆரம்பத்திலேயே அரும்பி வளர்ந்து வருகிறது! இந்தக் கோட்டை பலனளிக்காது — இதுபோன்ற 'கோட்டைகள்' தேடுமளவுக்கு ஒரு தேசிய இயக்கம் செல்ல நேர்ந்ததை எண்ணி, உலகு, கேலி செய்யும். அந்தக் கேவலத்தை, 'பரவாயில்லை' என்று எண்ணும், மனோபக்குவம்' படைத்திருக்கும், டில்லி ஆதிபத்யம் உணரவேண்டும்.

சிறைக் கம்பிகளைவிட
மனித நரம்புகள் சக்திவாய்ந்தவை!
அடக்குமுறையைவிட
அதிருப்தித் தீ, பிரமாண்டமானது!!

———

# எகிப்து

எகிப்து மன்னர் பரூக் அவர்களுக்கு இறுதி எச்சரிக்கை அளித்ததும் அதன்பிரகாரம் அவர் முடி துறந்து வெளியேறியது பற்றி விளக்கி எகிப்து இராணுவத் தளபதி முகம்மது நகீப் தலைமைக்காரியாலயம் ஓர் அறிக்கை விடுத்துள்ளது. எகிப்து மன்னருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் ஒரு சிறு பகுதி வருமாறு: "தங்கள் நிருவாக ஊழல்களால் நாட்டு மக்கள் துயரடைகின்றனர். சொத்து, குடியுரிமை, சுதந்திரம் ஆகியவைகளுக்குப் பாதுகாப்பும் உறுதியும் இல்லையெனக் கருதுகிறார்கள்.........மன்னரே! தங்களின் ஆட்சியில் துரோகிகள் வளர்கின்றனர்; லஞ்சம்பெறுவோர் புகலிடம் பெறுகின்றனர். ஆகவே தாங்கள் முடிதுறப்பதுடன் இளவரசர் பட்டத்துக்கு வரும்படியும் நாட்டினரும் படையினரும் கேட்கின்றனர்........"

முடியரசுக்கு மக்கள் இனித் தலை வணங்கமாட்டார்கள் என்பதற்கு எகிப்து மன்னரான பரூக் அவர்கள் முடி துறந்து நாட்டைவிட்டு வெளியேறியமையும் ஒரு சான்றாகும். இவர் இராணுவத்தின் கட்டளைக்குப் பணிந்து சென்ற மாதம் 26-ல் முடிதுறந்து தம் மனைவியுடனும் பட்டத்து இளவரசரான தமது 7 மாதக் குழந்தையுடனும்நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார். இளவரசருக்கு 7 வயதானதும் அவர் எகிப்துக்குத் திரும்புவார். அதுவரை எகிப்தில் இராஜப் பிரதிநிதிகள் சபை ஆட்சியே பல ஆண்டுகள் நடைபெறும்.

இராணுவத்தினர் குறிப்பிட்ட நேரத்துக்குள் இராணி நார்மன் பட்டத்து இளவரசர் புவூக், முதல் மனைவி பரிதாவின் இருபெண்கள் ஆகியோருடன், மன்னர் பரூக் அலெக்ஸாண்ட்ரியாவிற் கப்பலேறினார். முன்னாள் மன்னர் கப்பலிற் கால் வைத்ததும் இராணுவத் தலைமைக் காரியாலயத்திலுள்ள அவரது படம் உடைக்கப்பட்டது.

இப்போது நாட்டு அரசியல் இராணுவப் புரட்சித் தலைவர் தளபதி நகீப் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்றது. சென்ற ஆறு மாத காலமாக எகிப்தில் நல்ல முறையில் ஆட்சி நடைபெறவில்லை. அரசினர் தாம் நினைத்தவாறெல்லாம் ஆட்சி நடாத்தி மக்களின் அதிருப்தியையும வெறுப்பையும் தேடிக்கொண்டார்கள். சிலவாரங்களுக்கு முன்னர் பிரதம மந்திரியாக சிர்ரி பாஷா நியமிக்கப்பட்டார். பின்னர் ஹிலாலி பாஷாவைப் பிரதமராக நியமித்தார்கள். ஹிலாலி பாஷாவின் மந்திரி சபையில் மன்னரின் மைத்துனரான இஸ்மாயின் ஷெரின் பாதுகாப்பு மந்திரியாக நியமிக்கப்பட்டார். தளபதி நகீப் அவர்கள் இதைக் கண்டு கனன்றெரிந்தார். எனவே இராணுவப் புரட்சியை ஏற்படுத்தி அதிகாரத்தை நொடிப்பொழுதிற் கைப்பற்றலானார்.

பரூக் மன்னர் சர்வாதிகார ஆட்சியைச் செலுத்த விரும்பினார். ஆனால் அதற்கு வேண்டிய திறமையோ ஒழுக்கமோ இவரிடம் காணப்படவில்லை. அத்துடன் நாட்டிலே ஊழல்கள் மலிந்து அரசாங்கத்தில் இலஞ்சமும் தலைவிரித்தாடிற்று. இவற்றை யெல்லாம் ஒழித்து நாட்டிலே நல்லாட்சி நிலவச்செய்ய முடியாத காரணத்தால் மக்களின் வெறுப்புக்குள்ளாகி மன்னர் முடிதுறக்கவேண்டிய நிர்பந்தத்துக்குள்ளானார்.

அரண்மனையில் முடி துறப்பு நாடகம் நடைபெறும்போது எகிப்தின் இரு தலைநகரங்களுமான கெய்ரோவிலும் அலெக்ஸாண்ட்ரியாவிலும் இராணுவம் முக்கிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது. வீதிகளின் இரு மருங்கிலும் மக்கள் கூடி நின்று துருப்புக்களை வரவேற்று ஆர்ப்பரித்தனர். "எகிப்தின் விடுதலைத் தலைவர் நகீப் வாழ்க!" என முழங்கினர்.

———

6-ம் பக்கத் தொடர்ச்சி

விடுதலை விழாவின் நாட்களை 'விரலில்' வைக்கிறான்! அந்த அளவுக்கு இன்று ஆட்சிபீடம் ஏறியோரின் சூதுமதி, அவனைத் துரத்திக் கொண்டேயிருக்கிறது. நலியும் நாடு, தேயும் நிலவு, மனதை உருக்கத்தானே செய்யும்! ஆலை அரசு ஒருபுறம் அடிமைக் கும்பல் ஒரு பக்கமுமா? பணத் தோட்டம வடக்கு! பாலைவனமாவதா தெற்கு! உலகம் முழுமைக்கும் பொதுவுடைமை தேடுமுன், அவன் நாட்டுக்குள் அந்த உரிமையோடு வாழ, ஆவேசமும் ஆர்வமும் கொண்டுவிட்டான்.

ஏழை எரிமலை, புகையும் காட்சியினைக் காண்கிறோம்-இந்த ஆகஸ்டு 15-ல், வாழமுடியாதவனின் குரல் ஒலிக்கத் துவங்கும் அற்புதக் காட்சியினைக் காண்கிறோம்! வறுமையால் விளைந்த நீர், கண்களில் அதிகரிக்க அதிகரிக்க அவனது உள்ளம் நெருப்புக்கோளமாகி வருகிறது! பாட்டாளிப் பட்டாளம் வளர்கிறது! வளர்கிறது!!

அதன், இலட்சிய கீதம், அதிகமாவதைக்காண ஆதிபத்ய வாதிகளிடம் திகில் அதிகமாகும் அறிகுறிகளும் தென்படாமலில்லை. திகிலை அடக்கிக் கொள்ள, தேசீய தலைமை, தித்திப்பைத் தடவிப் பார்க்கிறது — ஏழைகள் நாவில். "இதோ பார் தேசீய நிர்மாணத் திட்டம்!", "ஐந்தாண்டு திட்டம் தயார்!", "பூதான யக்ஞம்-அருமையான சாதனை", "பாரதசேவாசமாஜம்—பாரில் இனி ஏது கவலை?" என்றெல்லாம், பசப்புதலைப் பட்டிருக்கிறது, அகண்ட பாரதத்தைக் கட்டிக் காக்க விரும்பும், 'அடக்குமுறை' சர்க்கார். இந்த சொல்வித்தைகள்—வாடுபவன், கேட்டுகேட்டுச் சலித்துபோனவை ஆகவே, அவனை ஏமாற்ற இனி இயலாது! வாழ்த் துடிக்கும் அவன் வாழ்வு கிடைக்கும் வரை ஓயமாட்டான்!! — அந்த அறிகுறியை 'ஐந்தாவது ஆகஸ்டு' காட்டுகின்றது.

ஆதிபத்யவாதிகளுக்கு எச்சரிக்கையையும் புதுமைவிரும்பிகளுக்கு வளர்ச்சியையும், கடந்த 'ஆகஸ்டு'க்குப்பின் இப்போது வரும் 'ஆகஸ்டுக்கு'மிடையிலுள்ள நாட்கள், காட்டிவிட்டன. நீதி என்றும் வெல்லும்! சூது என்றும் நிலைக்காது! வெளிவேஷத்தால் பலன் பெறமுடியாது—'தீபம்' அரசாங்க மாளிகைகளில் எரிந்து விட்டால் போதாது. எல்லோர் உள்ளத்திலும் எரிய வேண்டும்—என்பதை உணர்த்துகிறது. அந்த இன்பநாள் வர, திராவிட நாடு திராவிடருக்காக, நாம் நடக்கவேண்டிய தூரம். நெருங்கிக்கொண்டே வருகிறது.

★

புதிய வெளியீடு!
சரிந்த தஞ்சையின் சரிதம்!
**வெங்கண்ணு**
"குன்றந்தோளான்" தீட்டியது
**விலை ரூபாய் ஒன்று**
கழிவு 22 o/o. அனுப்பும் செலவு இனம்.
விவரங்களுக்கு:—
எம். தூரி
குப்பையர் தெரு—சென்னை-1

# அறப்போர் வீரர்கள் பட்டியல்

ஆகஸ்டு அறப்போரில் ஈடுபட்ட தி. மு. க. தோழர்களின் விபரங்களைச் சுருக்கித் தந்துள்ளோம். இட நெருக்கடியால், இந்த அளவில், மேற்படி அறப்போர் நிகழ்ச்சிகள் முடிக்கப்படுகின்றன. நமது நிலை தோழர்கள் அறிந்ததே. மன்னிக்கவும். (ஆ-ர்)

ஆண்டிப்பட்டி

வாடிப்பட்டி ரயில்வே நிலையத்திலிருந்து மதுரை வரை உள்ள ரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த தோழர்கள்:— கே. ராமசாமி. அழகர்சாமி, என். ஓவு, ஆர். நானப்பன், எஸ். வெங்கிடசாமி, பி. கோவிந்தன், எஸ். வி. பிச்சை எ. ராசு, வி. ராசு, க. சிந்தனையாளன்.

அர்க்கோணம்

ரயில் நிலையம், அஞ்சலகம் முதலிய இடங்களிலிருந்த இந்தி எழுத்துக்களை அழித்த தி. மு. க. அறப்போர் வீரர்கள் :— எ. எல். சி. கிருஷ்ணசாமி, என். ஜி. ராசன், எ. எஸ். இஸ்மாயில், டபள்யூ. ஆர். ராமசந்திரன், கே. எம். உம்மர், அன்பு கோலோ.

திருப்பூர்

டெலிபோன் எக்சேஞ் ஆபீஸ், பிராஞ்ச் போஸ்டாபீஸ் முதலிய இடங்களிலிருந்த இந்தி எழுத்துக்களை அழித்தனர். கூலிப்பாளையம் ரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களும் அழிக்கப்பட்டன. ஊத்துக்குளி ரயில்வே நிலைய போர்டை அழிக்க முற்படும்போது தோழர்களை போலீஸ் கைது செய்து நேரம் கடத்திவிட்டார்கள். வஞ்சிப்பாளையம் அஞ்சலக போர்டை அழிக்கப் போகும் போது போஸ்ட் மாஸ்டர் போர்டை எடுத்து உள்ளே வைத்துக் கொண்டார். அறப்போரில் பங்கேற்ற தோழர்கள் :— டி. நடராசன், எம். சி. சண்முகம், பி. எம். பொன்னுசாமி—பல்லடம், பி. எம். கிருஷ்ணசாமி, எஸ். என். ஜெகதீசன், எஸ். என். அழகிரி, எஸ். சிவானந்தம், ஜி. எஸ். பாட்சா, கிரீன்.

சித்தூர்

கேசவன், நடேசன்.

செந்துரை

வி. எ. முருகேசன், எம். மருதமுத்து.

மாத்தூர்

டி. வி. கே. சுந்தரராசு, அண்ணாமலை, கன்னையன், பக்கிரி.

அரியலூர்

ஆர். எஸ். மணி, சுப்பிரமணியம், தங்கவேலு, நாகராசன்.

திருப்பாப்புலியூர்

புகைவண்டி நிலைய இந்திப் பெயரை தி. மு. க. தி. க. தோழர்கள் கலந்து அழித்தார்கள். அறப்போரில் கலந்துகொண்ட தி. மு. க. வீரர்கள்:— வி. ரங்கராசு, சி. என். தம்பிதுரை, எஸ். மணவாளன், ஏ. மணி, பி. பழனி, வி. ராதா,

இரா. தண்டபாணி, கோ-ராமசாமி, கோவிந்தன், ஏ. தேவன், இ. மணி, வைத்தியலிங்கம், செயராமன், வி- வீரப்பன், பி. நாராயணசாமி, எஸ். ராமமூர்த்தி, பி- ராமச்சந்திரன், எம்- சண்முகம், எஸ்- சண்முகம், கோ- பழனிசாமி, ஆர்- ரங்கநாதன், வைத்தியநாதன், ஆர்- கண்ணன், எஸ்- அருணாசலம், பச்சையப்பன், பி-சீனுவாசன், ஆறுமுகம், எம்- சம்பந்தம், பெருமாள், இ- ததிரேசன்.

விருதுநகர்

ரெஸ்டாரெண்டிலுள்ள இந்தி எழுத்துக்களையும், அஞ்சலக இந்தி எழுத்துக்களையும் அழித்த தோழர்கள்:—

எம். எஸ். இராமசாமி அருப்புக்கோட்டை

சிவசண்முகசுந்தரம் ,,

ந. இராமசாமி விருதுநகர்

திருமங்கலம்

கப்பலூர், சிவரகோட்டை, கள்ளிக்குடி முதலிய ஊர்களில் உள்ள புகைவண்டி நிலையங்களில் இருக்கும் இந்திப்பெயர்களை திருமங்கலம் தி. மு. க. தோழர்கள் அழித்தார்கள். அவர்கள் .— தர்மர், B com. இராசமன்னார்; இரசாக், காசிம், மைதீன், திப்புசுல்தான், கலைநேசன் எஸ். கே-பி-பால், வி. எஸ். பாண்டி சந்திரசேகர பாண்டியன், தனுக்கோடி.

கூத்தக்குடி

ஆர். வெங்கடாசலம்— சின்னசேலம்

எம்-நாராயணசாமி-அக்காரபாளயம்

முகாசாபரூர்

ஏ. எஸ். எச். ஏ. இஸ்மாயில்

மேல் நாரியப்பனூர்

ஆர். வெங்கடாசலம்—சின்னசேலம்.

எம். நாராயணசாமி — அக்காரபாளயம்.

திருவள்ளூர்

புகை வண்டி நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த அறப்போர் வீரர்கள் ;— பி. இளமாறன், எம். ஆர். சந்திரன். ஜே. சீனிவாசன், டி. எத்திராஜ், எம். சி. தேவராசன், (தி.க.) பெருமாள், கே. கோவிந்தன், டி. ஆர். அபுபக்கர், எம். இலக்குமணன்

கடம்பத்தூர்

அறப்போரில் கலந்துகொண்ட தி. மு. க. தோழர்கள்:— டி. ஆர். வரதன், ஜி. ஏழுமலை, ஆர். கோவிந்தன், என். கிருட்டினன், டி. ஜி. நடராசன், டி. சிராமுலு.

செவ்வாய்ப்பேட்டை

மதனன், எ-வேணு; தே-மூர்த்தி பி. நாராயணன், வி. ஜெகன்னாதன் என். இலக்குமணன்.

தின்னனூர்

எம். இலக்குமணன், ஆர். சரவணன்.

மாங்குடி

ரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த அறப்போர் வீரர்கள்:— டி. எஸ். நாதன், வி. செயராமன், ஆர். சிங்காரவேலு, எஸ். இராமானுசம்.

ஜோலார்பேட்டை

இந்தி எழுத்துக்களை அழித்த தி. மு. க. வீரர்கள் :— வி. டி. குப்புசாமி, எஸ். எம். கோபால், வி. வையாபுரி, சி. கோபால், வி. எல். துரைசாமி.

வேலூர்—டவுன்

ரயில்வே நிலைய இந்திப் பெயரை அழித்த அறப்போரினர் :— பூங்கோதை, மோகனவேல், பாண்டியன்,

வேலூர்—கன்டோன்மெண்ட்

இந்திப் பெயர்களை அழித்த இலட்சிய சிலர்கள்:— அலமேலு அப்பாதுரை, இளஞ்செழியன் அ. மாணிக்கம்.

காட்பாடி

கருத்தோவியன், சின்னையன், நேயன், கரிகாலன், துரை.

பாக்காலா

நாராயணசாமி — சித்தூர் சண்முகம்—வேலூர் கருத்தோவியன்.

பென்னாத்தூர்

எஸ்- எ- அண்ணாமலை, பெ. நா. அனுமந்தன், பி- ஜி- சாமி, பி-என். இரணியன்.

மணப்பச்சேரி

அஞ்சலக இந்தி எழுத்தை அழித்த அறப்போர் வீரர்:— எஸ். சிவகுருநாதன்.

அசக்கணத்தூர்

மதுரைமுத்து—சின்னசேலம்

எம். வி. அருணாசலம் (தி. க.)

பூந்தோட்டம் (தஞ்சை)

தட்சணாமூர்த்தி, மற்றும் பலர் இங்குள்ள ரயில் நிலைய இந்தி எழுத்துக்களை அழித்தனர்.

சின்னபாபுசத்திரம்

ரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களை கண்டமங்கலம் தி. மு. கழக தோழர்கள் அழித்தார்கள். பங்கு கொண்டவர்கள்:- கே. பலராமன், கே. டபல்யூ. சாரங்கபாணி.

மொரப்பூர்

புகைவண்டி நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த தர்மபுரி தி.மு.க. தோழர்கள்:- த. ந. பச்சையப்பன், இராமசாமி, த. ந. கோபால், த. சி. கிருஷ்ணன், பா. சி. கந்தையா, ராசகோபால்.

சின்னசேலம்

முத்துசாமி, பூமாலை.

பன்னப்பட்டி

சுருளி, முத்து, பேயாண்டி, அழகர்சாமி, சோணைமுத்து, காளியப்பன், ரத்தினசாமி, பழனிச்சாமி, செல்லம், ராமசாமி, பொன்னுச்சாமி, பாண்டியன், தா. ஆண்டி (குல்லலக்குண்டு), துரையப்பன், ராசு, கருப்பையா, ராமானுசம், கூலுரத்தினகிரி, பழனிச்சாமி, பாண்டி, ராமலிங்கம்.

காட்டுப்புத்தூர்

கே. எ. ராஜமாணிக்கம், கே. சடையப்பன், எம். கே. சோமசுந்திரம், அப்துல்நபி, கே. என். கோவிந்தராஜன், கே. பி. ராமச்சந்திரன், ஆர். வேம்படி, கே. பி. வேணுகோபால், வி. முத்துக்கருப்பன், ராமமூர்த்தி, எம். ஆர் மாரிமுத்து, ராஜாராம், கே. மணியகாரர், கே. கந்தசாமி, சங்காலிங்கம், நல்லதம்பி, முத்துவீரன், நூர்தீன், வி. நல்லுசாமி, எஸ். என். சரவணன், கே. எம். செல்லப்பெருமாள், கே. எம். தேக்கமுத்து, கே. எ. நீலமேகம், கே. பி. முத்துச்சாமி.

ஆற்காடு

தி. மு. க. தோழர்கள், ராணிப்பேட்டை, வாலாஜாரோடு, தல்ங்கை முகுந்தராயபுரம், திருவலம், மகுதாலம், ஆகிய புகைவண்டி நிலைய இந்தி எழுத்துக்களை அழித்தனர். அவர்கள் :— இரா. பார்த்தசாரதி, த. பொன்னம்பலம், ஆ. தி. கிருட்டிணன், ஏ. வி. கணேசன், த. ஜானகிராமன், அ. லோகநாதன், செங்கல்

## வருந்துகிறோம்

காஞ்சிபுரம் திராவிடநாடு ஏஜண்ட்டும், நமது கழகத் தோழருமான தோழர் வே. ராஜுவின் வாழ்க்கைத் துணைவி பார்வதியம்மாள் தனது இளவயதிலேயே இயற்கை அடைந்தார் என்ற செய்தி நம்மையெல்லாம் கலக்கத்தில் ஆழ்த்தி விட்டது. துணைவியை இழந்து வாடும் தோழருக்கும் அவர்தம் குடும்பத்துக்கும் நமது ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

# நகரசபைத் தேர்தலும் நாமும்

## அறிக்கை

வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, நகர மக்களுக்கு நன்மையாகும் வகையில், கல்வி, சுகாதாரம், வைத்தியம், பாதையமைப்பு, ஊரமைப்பு, நீர் வசதி, ஒளி வசதி இன்னபிற பணிகளைச் செய்துவரவே நகர சபைகள் பெரு நகரங்களில் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன.

நகர சபை, சட்டத்தை நிறைவேற்றி வைக்கும் ஒரு மன்றமே ஒழிய, சட்டத்தை இயற்றி தருவதற்கு ஏற்பட்ட அமைப்பு அல்ல. கட்சிகளின் இலட்சியக் கருத்துக்களை நிறைவேற்றவோ அல்லது நிலை நாட்டவோ நகர சபைகளில் இடம் ஏதுமில்லை. கட்சி மனப்பான்மையை விட காரிய மாற்றும் மனப்பான்மையே நகர சபைகளில் தேவைப் படுவதாகும். கட்சிப் போட்டிகளுக்கிடையே நகர சபை உருவானால், நகர மன்றம் கட்சிகளின் போர்க்களமாக, மாறுமே யொழிய, காரியமாற்றும் பொதுப் பணி மன்றமாகக் காட்சி தராது, என்பதை நாம் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றோம்.

நகர சபைக்குத் தேவைப்படுவது புதிய சட்டம் : தீட்டும் இலட்சியவாதிகளல்ல, இயற்றப்பட்ட சட்டத்தை ஒழுங்குபட நிறைவேற்றித் தரும் திறம் படைத்தோரைப் பெறுவதே. எனவேதான், திராவிட முன்னேற்றக் கழகம் கட்சித் தோற்றத்தில் நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதாக இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தோர் தனிப்பட்ட முறையில் நகர சபைத் தேர்தலுக்கு நின்று பொதுப்பணி செய்ய முற்படலாம்.

கழகத் தோழர்கள் போட்டியிடும் முறை கழகக் கொள்கைகளையும், கட்டுப்பாட்டையும் பாதிக்காத வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

கழகத்தின் ஸ்தாபன ரீதியான பிரச்சாரம், விளம்பரம், எந்த தனிப்பட்ட கழகத் தோழருக்கும் அளிக்கப்பட மாட்டாது.

அந்தந்த நகரங்களில் வீண் போட்டிகளைக் குறைக்கவும், கூட்சிப் பேரில் நிற்கும் காங்கிரசை முறியடிக்கவும், முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள், தங்கள் தங்கள் ஊருக்கு ஏற்றார்போல் கூட்டு முன்னணியை, வசதியை முன்னிட்டு ஏற்படுத்திக் கொள்ளலாம். அந்த முன்னணி வெளியிலிருந்து எந்த ஒரு கட்சியாலும் அல்லது பல கட்சிகள் இணைந்த அமைப்பாலும் இயக்கப்படுவதாக இல்லாமல், அந்தந்த ஊர் நன்மைக்காக ஏற்பட்ட ஒன்றாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

12—8—52
"அறிவகம்"
இராயபுரம், சென்னை—13

சி. என். அண்ணாதுரை
பொதுச் செயலாளர்

வராயன், பெரியசாமி, ஆ. ஆறுமுகம், வாசு, கிருஷ்ணமூர்த்தி, சதாசிவம், ஜே. சபாபதி, சிவா, பி.என். குப்புசாமி, முனிக்கண்ணு, சடகோபன், மணிஎழிலன்.

**பரமக்குடி**

ஆக்ஸ்ட் அறப்போரில் கலந்துகொள்ள இருந்த தோழர்களை 31-7-52 இரவு 2 மணிக்கு கைது செய்து, மறுநாள் காலை 11 மணிக்கு விடுதலை செய்தனர். பிறகு தோழர்கள் பரமக்குடி, கமுதக்குடி ரயில் நிலையங்களிலிருந்த இந்தி எழுத்துக்களை அழித்தனர். அவர்கள்;- எஸ். மகேஸ்வரன், எஸ். தண்டபாணி. எம். பழனிச்சாமி, எ. எச். துரை, எம். காசி, டி. எம். ஆர். லிங்கன், எம். ஞானம், எ. செல்லச்சாமி, டி. இராமசாமி.

**அவரிக்காடு**

கு. சுப்பிரமணியன், ஆர். எஸ். மணி, அ. சண்முகம், ந. சங்கரன்.

**திருநெல்லிக்காவல்**

டி. எஸ். எஸ். ராசன், கே. கோவிந்தசாமி, எஸ். சுப்பிரமணியம், ஜானகிராம்.

**மங்கநல்லூர்**

இ. எஸ். எம். சுல்தான், முத்துக்குமாரசாமி, கிருட்டினமூர்த்தி, இப்ராகிம், சுந்திரமூர்த்தி, முத்தையன், செயராமன், முகம்மதலி.

**பூந்தோட்டம்**

ரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த தோழர்கள்:- இரத்தினம், சோமு.

**கரிவலம்வந்தநல்லூர்**

புகைவண்டி நிலைய இந்தி போர்டை தி. மு. க. தோழர்கள் அழித்தார்கள். தோழர்களை சில மணி நேரம் காவலில் வைத்து பிறகு விடுதலை செய்தனர். கலந்து கொண்ட தோழர்கள்: சி. எஸ். பிச்சையா, கா. கருப்பையா, ஆ. ராமசாமி, க. சிதம்பரம், சி. பா. சுப்பையா, பொ. வேனுசாமி, பி. ஜே. தங்கசாமி.

**பாளையங்கோட்டை**

புகைவண்டி நிலையம், தபால் நிலையம் ஆகிய அடங்களிலிருந்த இந்தி எழுத்துக்களை அழிப்பதில் பங்கு கொண்ட தி. மு. க. தோழர்கள்: கோ. அருணசலம், சுப்பாயலு, திருப்பாற்கடல், சிதம்பரனுர்.

**திண்டுக்கல்**

ரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களையும் அஞ்சலக எழுத்துக்களையும் அழித்த தி. மு. க. வீரர்கள்:- பி. சமதர்மம், தங்கவேலர், எம். ஆர். செல்லப்பா, பி. ராசா, இரா. கிருட்டினசாமி, செல்வத்தமிழன், எம். பிச்சை, என். முத்து, மைக்கேல், என். எஸ். கே. ஜெயராம், எம். ஆர். எம். நெப்போலியன்.

**தாமரைப்பாடி**

இங்குள்ள ரயில்வே நிலைய இந்தியை அழித்ததில் பங்கு கொண்ட தோழர்கள்: பி. மாரியப்பன், எஸ். எ. ராஜு, இளங்கண்ணன், க. பெரியசாமி, பழனிச்சாமி.

**ஆகஸ்டு!**
**சர்க்கார் 'அழைப்பு'**

வேலூர் வட்டாரத்தில் ஆகஸ்டு முதல் நாள் அறப்போரில் ஈடுபட்டமைக்காக தோழியர் அலமேலு அப்பாதுரை, வேலூர் தோழர்களான வி. எம். மோகனவேல் இளஞ்செழியன், வேதாந்தம், புருஷோத்தமன் ஆகியோர்மீது சர்க்கார் வழக்கு தொடர்ந்துள்ளது. ரயில்வே சட்டம் 120-வது பிரிவுபடி குற்றம் சுமத்தி வேலூர் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் 16—8—52 அன்று ஆஜராகும்படி சர்க்கார் 'அழைப்பு' அனுப்பியுள்ளது.

**வேல்வார் கோட்டை**

தெளலத், ராஜேந்திரன், சுப்பையா ஆகியோர் இங்குள்ள ரயில்வே நிலைய இந்தி போர்டை அழித்த தி. மு. க. வீரர்கள்.

**வட்டமதுரை**

அ. தங்கராஜ், மா. வள்ளிமணாளன், சி. எ. முனுசாமி, வீரபத்திரன்.

**அக்கரைப்பட்டி**

ராமு, வேதம், வரதராசன்.

**ரெட்டியன் சத்திரம்**

ச. குருசாமி, டி. பால்ராஜ், ரெங்கசாமி.

**அய்யலூர்**

கணபதி, ஒ. எம். மீரா, பி. எ. காதர், கருப்பையா.

**அவிநாசி**

அஞ்சலகத்திலிருந்த இந்தி போர்டை அழித்த அறப்போர் வீரர்கள்: எஸ். ஆர். சண்முகம், ஆர். கிருட்டிணசாமி, டி. கே. சத்தார்.

**சங்ககிரி**

புகைவண்டி நிலையத்திலிருந்து இந்தி எழுத்துக்களை அழித்த இராசிபுரம் தி. மு. க. தோழர்கள்: வி. கே. சாமி, ஆர். எஸ். சென்றுயன், இ. சீரங்கன்.

**கல்லாவி**

இங்குள்ள புகைவண்டி நிலைய இந்தி போர்டை அழித்த தி. மு. க. வீரர்கள்: கே. வி. பெருமாள், இரா. சண்முகமணியன், து. மு. பன்னீர் செல்வன், இராமனுசன், கெ. வி. பெருமாள், இரா. மணிமொழி, இரா. ஏகாம்பரம், தி. க. தோழர் வேளாசெட்டியார்

**அம்மாப்பேட்டை**

ரயில்வே நிலைய இந்தி எழுத்துக்களை அழித்த அறப்போர் வீரர்கள்: எஸ். எம். பக்கிரிசாமி, என். கே. பிச்சை, வீரையன்.

**அய்யம்பேட்டை**

புகைவண்டி நிலைய இந்தி போர்டை அழித்ததில் பங்கு கொண்ட தி. மு. க. தோழர்கள்:— மு. செல்வராசு, ஜே. எஸ். வெங்கடாசலபதி, சம்புலிங்கம். எஸ். கரிகாலன், கிருட்டிணமூர்த்தி.

**அதிராம்பட்டணம் (கைது-விடுதலை)**

ரயில்வே நிலைய இந்திப் பெயர்களை அழித்த வீரர்கள்: — தண்டபாணி, அமிர்தலிங்கம்.

**விழுப்புரம்**

புகைவண்டி நிலைய இந்திப் பெயர்களை அழித்த தி. மு. க. வீரர்கள்:— சு. முத்துராமன், வி. பி. சங்கரன், ஜி. சுந்தரம், டி. நடராசன், கோ. மாணிக்கம், கபர்ஷரீப்.

**அம்பாதுரை**

அய்யன்பாளயத்திலிருந்து இங்கு சென்று இந்தி போர்டை அழிக்கச் சென்ற தி. மு. க. தோழர்களை போலீசார் பதினைந்து நிமிடம் காவலில் வைத்து விடுதலை செய்தனர். அழிக்கச் சென்ற தோழர்கள்:- பி. செல்லையா, எம். எ. ஆர். ஆறுமுகசாமி, சி. இருளப்பன், எ. கே. வரதராஜு, ஜி. மகாராஜன், மூக்கன், மருதமுத்து, ராமசாமி.

**பூலாங்குளம்**

அஞ்சலக இந்தி எழுத்தை அழித்தவர்:— சு. ஆத்தியப்பன்.

**தென்காசி, கீழ்ப்புலியூர்**

ரயில் நிலைய இந்தி போர்டுகளை அழிப்பதில் பங்குகொண்ட தி.மு.க. தோழர்கள்:- எம். எஸ். சுந்தரம், பி. இ. அகத்தியன், வீ. பிச்சாண்டி, மரகதம், மைதீன் பிள்ளை, கண்ணன், மாரியப்பா, என். வி. லிங்கம்.

★

## செயல் வீரர்களே!

★

தாயகத்தின் இழிநிலை துடைக்க, உங்கள் உள்ளங்களிலே கொந்தளிக்கும் ஆர்வத்தைக் காட்டிவிட்டீர்கள்—ஆகஸ்டு அறப்போரில். உங்களைக் காண நல்லோர் மகிழ்வர்! நாடாளும் 'வெறி' கொண்டோர் நடுங்குவர்!

ஆனால், ஆகஸ்டு அறப்போர்—ஒரு அடையாள தினம்தான்.

நாம், சந்திக்கவேண்டிய 'ஆகஸ்டு'கள் எத்தனை எத்தனையோ உள்ளன.

நமது எதிரிகள், மிகவும் பலம் வாய்ந்தவர்கள். அதிகாரம், பணபலம், பிரசாரம், வாய்ஜாலம், துப்பாக்கி—இத்தனையையும் ஏந்தியிருப்பவர்கள்.

அவர்களை விரட்டியபின்தான், தாயகத்தை தளிர்ச்சோலையாக்கிட முடியும்.

எவ்வளவு பெரிய பணி இது! எண்ணிய மாத்திரத்தில் முடிந்துவிடக் கூடிய காரியமா? அல்ல! அல்ல!! விடுதலை பெற, அடிமைப்பட்டோர், ஈடுபட்ட காரியங்களையும் கஷ்டங்களையும், சரிதங்கள் நமக்குச் சொல்கின்றன.

ஆனாலும், அவர்கள், அவைகளை உதறித்தள்ளி வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறார்கள்.

அத்தகைய வெற்றியினை நாம் என்று அடைவோம்? இடுப்பொடிக்கும் இந்தி ஏகாதிபத்யத்தை, இங்கிருந்து என்று விரட்டுவோம்? அந்தப் புதினம் காண.

நாம், எத்தனையோ புயல்களைத் தாங்க நேரிடலாம். துப்பாக்கிகள் அலறலாம்! இரத்தம், பூமிமாதாவின்மீது ஓட நேரிடலாம்! அத்தகைய 'தியாக நாள்' காண, நீங்கள், துடிப்பதை—ஆகஸ்டுமூலம் காட்டிவிட்டீர்கள்.

எதிர்காலம், நம்மை ஒளிவீசி அழைக்கிறது. அந்த இன்ப காலத்தை எட்டிப் பிடிக்க நம்மை நாம் தயார்செய்து கொள்ளவேண்டும். தாயகம் தனித்து வாழ—அருமையான 'கோட்டை'யும் மறவர்களும் தேவையன்றோ? நமது கழகம்ஒவ்வொன்றையும் கோட்டையாக்குவோம். கொடுமைப் பீரங்கிகள் அலறும் நாட்கள், அதிகத் தூரத்தில் இல்லை.

இதனை எண்ணுங்கள்! எஃகுக் கோட்டையாக ஆக்குங்கள்!!

### நடக்க இருப்பவை

திருச்செங்கோடு: 21—8—52 வியாழன் மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன், ஈரோடு அப்பாவு ஆகியோர் பேசுவர்.

## தி. மு. க.
## 3-வது ஆண்டு மலர்

★

21—9—52 அன்று "திராவிட நாடு" மலர், வெளிவர இருக்கிறது.

வர்ண முகப்பும், அரிய கருத்து விருந்துமாக, மலர் திகழும்.

அருமையான கட்டுரைகள் கதைகள் பலவும் இடம் பெறுகின்றன.

எழில் மிக்கதோர் மலராக மணம் வீசும்.

மலர் பெற விரும்புவோர் 1—9—52-க்குள் 0—8—0 வோடு நமக்கு முன்னதாகவே தெரிவிக்க வேண்டும்.

தோழர்கள், ஆங்காங்குள்ள நமது ஏஜண்டுகளிடமும், எட்டணா செலுத்தி, பதிவு செய்துகொள்ளலாம்.

குறிப்பிட்ட தேதிக்குப்பின், மலர் விரும்பி எவர் எழுதினாலும், கவனிக்க இயலாது.

சிறந்த மலர்! அரிய முறையில் வெளிவரும்!!

நிர்வாகி.

## காஞ்சி
## நகரசபைத் தேர்தல்

காஞ்சி நகரசபைத் தேர்தல் சம்பந்தமாக, கமிஷனர் திரு. செந்தில் வேலாயுதம் கீக்கண்ட அறிக்கையை பொதுமக்களுக்கு விடுக்கிறார்:

காஞ்சி நகராட்சி மன்றத் தேர்தல் செப்டம்பர் 19-ந் தேதி நடைபெறும். மேற்படி தேர்தலில் கலந்துகொள்ள விரும்புவோர் 19—8—52-லிருந்து 21-8-52-க்குள் தத்தமது 'நாமினேஷனை'த் தாக்கல் செய்யவேண்டும். 22-8-52 அன்று நாமினேஷன் பரிசீலனை நடைபெறும். தேர்தலில் கலந்து கொள்வோரின் பட்டியல் 27-8-52. அன்று வெளியிடப்படும். (அப்பீல் ஏதாவது இருந்தால் 5—9—52 அன்று முடிவு தெரிவிக்கப்படும்) தேர்தல் 16—9—52 அன்று, எல்லாவார்டுகளுக்கும் நடைபெறும். மறு நாள், வோட்டுகள் எண்ணப்படும்.

### காஞ்சி தேர்தல்

காஞ்சிபுரம் நகரசபைத் தேர்தலில் நகர சீர்திருத்தக் கழகம் போட்டியிடுகிறது. கட்சி, ஜாதி, மதமில்லாத — நகர முன்னேற்றத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டதே இந்த கழகமாகும்.



நேஷனல் பிக்சர்சார் தயாரிக்கும் ரத்தக்கண்ணீர் திரைப்படத் துவக்க-விழா 13—7—52 பிரகாஷ் ஸ்டுடியோவில் பிரகாஷ் ராவ் தலைமையில் நடைபெற்றது. மு. கருணாநிதி, M. R. ராதா, S. V. சகஸ்ரநாமம் ஆகியோர் வளர்ந்துவரும் திரையுலக மறுமலர்ச்சி பற்றி பேசினார்கள்.

சிறு கதை

# ஆலமரத்துப் புறாக்கள்

முறு காறு

அருவிகளின் சலசலப்பு ஓசையும், அதை சுருதியாகக்கொண்டு குயில்கள் மீட்டிய கீதமும், அதற்கேற்றாற்போல் மயில்கள் காட்டிய நடனமும் அந்தக் காட்டையே ஒரு சுந்தரபுரியாக விளங்கச் செய்யும்.

காட்டின் நடுவிலே ஒரு பெரிய ஆலமரம். ஆலமரத்துப் பொந்துகளிலே அழகுற விளங்கும் சிறு சிறு புறாக் கூடுகள். அந்தக் கூடுகளிலேயிருந்து எட்டிப் பார்த்தபடி கானகத்து உற்சாகத்தை ரசித்திடும் மணிப்புறாக்கள்.

மயிலாட்டத்தைப் பார்த்தாயா என்னும் ஒரு புறா. மைனர் புறாவின் மயக்கத்தைக் கிண்டல் செய்தபடியே "அதோ கேள் குயிலின் கீதம்" என்றிடும் மற்றொரு சங்கீதப் புறா. மயிலாடக் கண்டு வான்கோழிகள் ஆடிப்பார்த்து முடியாத காரணத்தால் "ஆட்டமே கூடாது" என ஆர்ப்பரிக்கும் வான்கோழியின் வாட்டு மதி பற்றி கேள்விப் பட்டீர்களா, என பிரசங்கம் செய்யும் ஒரு இளம் புறா. எல்லாம் சரிதான் இன்றைக்கு எனக்கும் என்னைச் சார்ந்தவர்களுக்கும் உணவே கிடைக்கவில்லை யென்று ஏக்கக் குரல் எழுப்பும் ஒரு இளைத்த புறா. எனக்குக் கிடைத்த உணவை ஒரு பருந்து பற்றிக் கொண்டு போய்விட்டது என பரிதாபச் சிந்து பாடிவரும் ஒரு புறா. நல்லவேளை பருந்துக்கு விருந்தாகாமல் நீ தப்பினையே என்று மகிழ்ச்சி கொள்ளும் இன்னொரு புறா. இப்படி இவைகள் பேசிக்கொண்டிருக்கும் போதே விர்ரெனப் பறந்து வந்து மரத்தின் கிளையிலே அமரும் ஒரு வல்லூறு! அதைக் கண்டதும அதிர்ச்சியுற்ற புறாக்கள் அலறியடித்துக்கொண்டு காடுகளிலே புகுந்திடும். அவசரத்திலே அலை மோதிக் கிடந்திடும் சில புறாக்களை வல்லூறு வயிற்றுக்குள் தள்ளிவிட்டு ஏப்பம விடும். அந்த ஏப்பத்திலே "வந்தே மாத்தினோன்" என்ற வார்த்தைகளும் இறுமாப்போடு கலந்து வரும். இது வாடிக்கையாக அந்த ஆல மரத்திலே — ஆமாம்; புறாக்கள் ராஜ்யத்திலே நடைபெறும் நிகழ்ச்சியாகிவிட்டது.

இந்தக் கொடுமைபற்றி புறாக்கள் யோசிக்கத் தொடங்கின. 'நிம்மதியற்ற வாழ்வு, நித்ய நிகழ்ச்சியாகி விட்டதே! இதற்கு நிவர்த்தி கிடையாதா?" என ஏக்கக்குரல் எழுப்பின.

இதற்கோர் முடிவுகட்ட வேண்டுமென்று இரண்டு புறாக்கள் முதலில் கிளம்பின. ஒன்று கரும்புறா. மற்றொன்று வெண்புறா. வல்லூறை எதிர்த்திட இரண்டு திட்டம் வகுத்தன. இரண்டு புறாக்களுக்கும் ஏற்கனவே "கொள்கை கொடுப்பினை" விஷயத்தில் சிறிது தகராறு இருந்த போதிலும், வல்லூறை விரட்டிடும் கொள்கையில் இரண்டும் கச்சையை வரிந்து கட்டிப் புறப்பட்டன. இது கண்டு ஆலமரத்துப் புறாக்கள் அனைத்தும் "விடுதலை விருத்தம்" பாடி 'வெற்றி முரசொலி' கொட்டத் தொடங்கின. ஆனந்த ஆரவாரம் செய்து கருப்புப்புறாவும், வெள்ளைப் புறாவும் இடும கட்டளையை எதிர்பார்த்திருந்தன.

அந்த சமயத்தில் ஒருநாள். ஒரு கலர்ப்புறா அவசர அவசரமாகதுடித்துப்பறந்தபடி ஆலமரத்திற்கு வந்தது. அது பறந்துவந்த காரணம் ஒரு வேடன் அதைக்குறிபார்த்தது தான். அந்தவேடன் உணவுக்காகப் புறா தேவையில்லை; கலர்ப்புறா அழகாயிருக்கிறதே! அதைப் பிடித்துச் சென்றால் நல்லவிலைக்கு விற்கலாம் என்ற ஆசையாலேயே அவன அதைப் பின்தொடர்ந்தான். கலர்ப் புறா ஆலமரத்தில் நுழைந்துவிட்டதைக்கண்ட வேடன் அதை எப்படியாவது உயிரோடு பிடிக்கவேண்டுமென்று எண்ணி மரத்தடியிலே சுற்ற ஆரம்பித்தான். இதைக்கண்ட கலர்ப்புறா கலங்கிவிட்டது. ஆல மரத்துப் புறாக்களிடம் சென்று அபயம் கோரியது. அந்தப் புறாக்கள் "எங்களால் வேடனை எதிர்க்க முடியாது" என்று கூறின. எப்படியோ கலர்ப்புறா தன் வேதனைக் குரலை அதிகப்படுத்தி மரத்திலுள்ள சில புறாக்களை தன்வசப்படுத்திக் கொண்டது. இந்த நிலைமையை கரும்புறாவும், வெண்புறாவும் கண்டன. வல்லூறை எதிர்க்கும் வேலையோடு, வேடனை விரட்டும் வேலை வேறு சேர்ந்துவிட்டதே; இதற்குக் காரணம் கலர்ப்புறாவின் மசயல் தானே; கலர்ப்புறா இங்கு வராமலிருந்தால் இந்தப் புதுத் தொல்லை வராதே என்று வெண்புறா வருத்தப்பட்டது.

அதற்குள் கலர்ப்புறா, கரும் புறாவை தனியே அழைத்துச் சென்று ஏதோ பேசியது. இரண்டும் சேர்ந்து வேடனை விரட்டுவது என்று திடீரென்த்திட்டம் தீட்டின. பிறகு கலர்ப்புறா, வெண்புறாவிடம் ஓடிவந்து — "வேடனை விரட்ட நீயும் வா!" என்று கூப்பிட்டது.

"வேடனைவெற்றிக்கொள்ள நான் வருகிறேன். நீ பிறகு வல்லூறை விரட்டி விடு, ஆலமரத்தை புறாக்களின் தனிமாளிகையாக்கும் முயற்சியில் ஒத்துழைப்பாயா?" என்று வெண்புறா, கலர்ப்புறாவிடம் ஒரு நிபந்தனை போட்டது. கலர்ப்புறா அதற்கு இணங்கவில்லை.

மரத்தின் கீழ் நின்று கொண்டிருந்த வேடன், புறாக்கள் கூடிக் கூடிப்பேசுவதைக் கண்டான். அந்தப் புறாக்களிடமே சொல்லி கலர்ப் புறாவைததான் பிடித்துக்கொள்ளலாம் என்று கருதி — புறாக்களைப் பார்த்து "ஓட்டு ஓட்டு — கலர்ப் புறாவை" என்று கதறினான்.

இறுதியாக வேடன் மரத்திலேறி கலர்ப்புறாவை உயிரோடு பிடிக்கத் திட்டம் போட்டு ஏற ஆரம்பித்தான். கலர்ப்புறாவோ பறந்து சென்றால் வேடன் கணைக்கு இரையாவோம் என அஞ்சி, கரும்புறாவின் துணையோடும் வேடனை எதிர்க்கக் கிளம்பியது. கடைசி நேரத்திலும் வெண்புறாவுக்கு கலர்ப்புறா அழைப்பு விடுத்தது.

"உன் காரியத்தை மட்டும் சாதித்துக் கொள்ள முடியாது; நம் காரியமென்ன?" என்று கேட்டது வெண்புறா.

உடனே கரும்புறா, வெண்புறாவிடம், "ஏதோ ஆனது ஆகிவிட்டது; வேடனை விட்டால் நம்மையெல்லாம் கொன்று விடுவானே" என்று உபதேசம் செய்தது.

அது கேட்ட வெண்புறா, "வேடனை எனக்கு வீழ்த்தத் தெரியும் அதற்காக கலர்ப்புறாவின் துணை எனக்குத் தேவையில்லை" என்று கூறி விட்டது கம்பீரமாக!

கரும்புறா, வெண்புறாவைக் கோபித்துக் கொண்டது. கங்காணி என்றது. வெண்புறா அதற்காக அபரவில்லை.

வேடன் மரத்தில் ஏறிவிட்டான். கரும்புறாவும், கலர்ப்புறாவும் தங்கள் மூக்குகளில் குச்சிகளைப் பிடித்துக் கொண்டு வேடனை எதிர்க்கத் தயாராயின. அந்தச் சமயத்தில் வெண்புறா, பின்புறமாகச் சென்று வேடனின் காலில பலமாகக் குத்தியது அலகுக்களால்: அதைச் சேர்ந்த புறாக்களும் வேடனின் காலைக்குத்தி ரத்தம வழியச் செய்தன. வலிதாங்க முடியாமல் வேடன் மரத்திலிருந்து கீழே விழுந்து மண்டையில அடிபட்டு மாண்டான்.

வேடன் வீழ்ந்ததும் கரும்புறாவும கலர்ப்புறாவும் வெற்றிச்சிரிப்பு சிரித்தன வெண்புறா தனகடமையை செய்து முடித்துவிட்டதாகக களிப்படைந்தது.

மறுநாள் காலையில் பத்துபுறாக்களை வல்லூறு அடித்துக்கொன்று குவித்தது. அதுமட்டுமல்ல: வல்லூறு அந்த ஆலமரத்தில் "இது வல்லூறின் மரம்" என்றும் எழுதி வைத்தது.

அந்த எழுத்தை அழிக்கவேண்டுமென்று கரும்புறாவும் வெண்புறாவும் புறப்பட்டன. கரும்புறா, கலர்ப்புறாவைக் கூப்பிட்டுப் பார்த்தது. கலர்ப்புறா, ஏதோ, சாக்குப் போக்குச் சொல்லி, அதில் கலந்து கொள்ள முடியாமைக்கு வருத்தம் தெரிவித்தது.

ஆலமரத்திலிருந்து வல்லூறை விரட்டும் பணியிலே வெண்புறா தீவிரமாக—ஈடுபட்டது.

கரும்புறாவும் அந்த முயற்சியில் இறங்கியது. அதற்கு கலர்ப்புறாவைக் கூப்பிட்டது.

"வல்லூறு கொடிய பறவைதான். ஆனாலும அதையும் இணைத்துக் கொண்டு எல்லோரும் ஆலமரத்தில் இஷ்ட பூர்வமான குடும்பம் நடத்தலாம்" என்று கலர்ப்புறா விளக்கம் தர ஆரம்பித்துவிட்டது. கரும்புறாவுக்கு ஒரே கோபம். வெட்கம் வேறு, வெண்புறா சிரிக்குமே என்று! 'அப்போதே சொன்னது அந்த வெண்புறா' என்று அங்கலாய்த்துக் கொண்டது கரும்புறா.

"உனக்கு நான் உதவினேனே நீயேன எனக்கு உதவக்கூடாது" என்று கரும்புறா அலகால் குத்தியது.

"தலை"யால் மோதியது. கலர்ப் புறாவும் தன் 'சக்தி'யைத் திரட்டி கரும்புறாவை எதிர்த்தது. இப்படி இரண்டும் ஒன்றோடொன்று அலகால் குத்தியும், சிறகால் அடித்தும், ஆலமரத்தையே ஒரு குழப்பத்திற்கு ஆளாக்கிவிட்டன.

வல்லூறோ தன் வேலையைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறது.

வெண்புறா, இந்த விசித்திரத்தை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் விழிக்கிறது. ஆனாலும் எதிரியைத் தாக்க தன் பலத்தை வளர்த்துக்கொண்டேயிருக்கிறது.

சில சில்லறை உதவிகளுக்காகவும், உடம்பு சுகமில்லாவிட்டால் மருந்து கேட்கவும், கலர்ப்புறா, வெண்புறாவிடம் வரும். அந்த உதவிகளை வெண்புறா செய்யும். ஆனால், இப்போது அந்த உதவிகளைககூட கரும்புறா, கலர்ப்புறாவுககு செய்வதில்லை.

இந்தக் கதையைக் கேள்விப்பட்டு காட்டிலுள்ள பறவைகள் எல்லாம் சிரிக்கின்றன; ஆச்சரியப்படுகின்றன; அதே நேரத்தில் வெண்புறாவின் அறிவுத்திறனைக்கண்டு பாராட்டி புகழ்ந்திடவும் செய்கின்றன. பாராட்டையும் புகழ்ச்சியையும் கேட்கவா வெண்புறாவுக்கு நேரம்; அதனுடைய லட்சியமெல்லாம் வல்லூறை விரட்டுவதுதான்!

★

# "என்ன சொல்வீர்?"

"என்னையே நம்பி ஏற்றேன் இப் பழியினை!" என்று, அன்னா ஆச்சாரியார் அறிவித்தார், அரிசிக் கட்டுப்பாட்டை ரத்துசெய்தபோது.

"இது தோல்வியுற்றால் நான் ராஜினமா செய்துவிடுவேன். அந்த நிலைமைக்கு ஆளாக்காமல் வியாபாரிகள் நடந்துகொள்வார்களென எதிர் பார்க்கிறேன்" என்றும் தெரிவித்தார். எல்லா பத்திரிகைகளும் தலையங்கங்கள் தீட்டின! பாராட்டின! பரவசகீதம் பாடின! எங்கும் இன்பம்தான் இனி—என்றெல்லாம் எழுதின. ஆனால், நாட்டின் நாலு பக்கங்களிலிருந்தும் வரும் செய்திகள் பயங்கரமாயிருக்கின்றன. அரிசியின் விலை பட்டணம் படி 1-க்கு ரூ. 1—6—0 வரைக்கும் போகிறதாம்! நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக இருக்கிறதாம், இந்த விலை உயர்வு!

இப்போது என்ன சொல்லுவார்? விலை யுயர்வதும், அரிசிக்கு மக்கள் அல்லாடுவதும் 'ஆண்டவன் கிருபை' என்பாரா! அல்லது, 'எம்பிரானின் திருவிளையாடல்போலும் இது'வெனச் செப்புவாரா!

சென்னையில் வர்த்தகர்கள் கூட்டத்தில் பேசும்போது, 'அரிசி பற்றாக்குறை' சம்பந்தமாக அருமையான வாசகம் ஒன்றைச் சிந்தினாராம். "அடுத்த பொங்கல் வரட்டும் —அரிசித் தட்டுப்பாடு இருக்காது" என்பது, அது. எவ்வளவு தீர்க்க தரிசனம் பாருங்கள். பொங்கல் வர வேண்டுமாம்! பொங்கல் எப்போது வரும்—'தை'க்குப் பிறகு. தை, பிறந்தால் அறுவடையாகும்—புது நெல் குவியலாம், விளைந்தால்! இந்த 'அற்புத உண்மை'யை. அவதியுறுவோர்க்கு அறிவித்துவிட்டு, குற்றாலம் போயிருக்கிறார்—குளிர்ச்சி தேட. எப்படியிருக்கிறது, பாருங்கள்! 'அபார மூளை', 'தெய்வப் பிறவி' யென்றெல்லாம், முரசு கொட்டினவே ஏடுகள், இதற்கு என்ன பதில் சொல்லும்?

## தேனீ வழக்கு

தேனீ கலவர வழக்கு, மதுரை 2-ம் நம்பர் உதவி முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் பெரியகுளம் முகாமில் 8—8—52 அன்று நடைபெற்றது. எதிரிகள் 40 பேரில் 33 பேர் மட்டும் வந்திருந்தார்கள். என். ஆர். தியாகராஜன், சக்திவேல் கவுண்டர் முதலிய காங்கிரஸ் பிரமுகர்கள் 7 பேர்கள் வராததால், வழக்கு மீண்டும் 22—8—52-க்கு ஒத்திவைக்கப்பட்டது. கண்டிப்பாய் அத்தேதியில் வழக்கு விசாரணைக்கு வாக எதிரிகள் வரவேண்டுமென உத்திரவிடப் பட்டிருக்கிறது.

"இந்தி எழுத்து அழிப்புப் போரில் கலந்துகொண்ட திராவிட முன்னேற்றக்கழகத்தவரின் விபரங்களை, பத்திரிகா தர்மம் பேசும் சிலபத்திரிகைகள் அப்படியே இருட்டடைப்பு செய்தது ஏன்?" என்றும், இன்னும், பல விதமாகவும், பலதோழர்கள்நமக்குக் கடிதங்கள் தீட்டியுள்ளார்கள். அவர்களுக்கு நாம் அன்போடு தெரிவிக்கும் பதில் இது தான்: இது ஒன்றும் புதிதல்லவே நமக்கு"

# ஆகஸ்டு பதினைந்து

"நாட்டு விடுதலைக்காக, சிறையிலே வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள், மண்டை பிளக்கப்பட்டவர்கள், குடும்ப சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன். தூக்கு மேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம்; ஆகிய வீரத் தியாகிகளின் கனவு நனவான நாள்!!"

இவ்விதம் மகிழ்ந்து பேசப்பட்ட 'ஆகஸ்டு 15' பிறந்து, ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. "அந்நிய ஏகாதிபத்தியம் ஒழிக!" காலனி ஆதிபத்தியமா?" என்று இடிமுழக்கமெனக் கூச்சலிட்டு, அதிகார பீடத்தில் காங்கிரஸ் கட்சியினர் அமர்ந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்று முதல் ஒவ்வொராண்டும் ஆகஸ்டு மத்தியில், விழா நாளாக அத்தினம் கொண்டாடப் பெறுவதும், கொடிகள் ஏற்றப்படுவதும், தீபவரிசைகளின் ஜகஜ் ஜோதியும், தலைவர்களின் கர்ஜனைகளும், கான சரஸ்வதிகளின் கீதங்களும், வானொலி முழக்கமும் தொடர்ந்து நடைபெறுவது தவறுவதில்லை. இவ்வளவு ஆர்பாட்டங்களும், குதூகலமும் அதிகாரத்தை ஏந்தியோர் மத்தியில்தானேயொழிய, அவர்களை நம்பியிருக்கும் மக்கள் மன்றத்தின் கண்களில் ஒளியில்லை! நீர் நிறைந்திருக்கிறது!! இதயத்தில், களிப்பு அல்ல இருப்பது; விசாரம். குதூகலமோ, மகிழ்வோ, அந்நாளில் மக்களிடம் இல்லாதது மட்டுமல்ல, ஒருவித சலிப்பும் உருவெடுத்திருக்கிறது. 'சுதந்திரநாள்' என்றால், அம்மாக்க மக்கள் எவ்வளவு இன்பம் அடைவதாகப் பத்திரிகைகளில் காண்கிறோமோ அதில் ஒருதுளிகூட இங்குள்ள மக்களிடம் காண முடியவில்லை. சலிப்பும் விசாரமும் சமஎடையில் தாக்க, இங்குள்ளோர் பேசுகிறார்கள், 'என்னப்பா, சுதந்திரம்? இவர்களைவிட அவர்கள் எவ்வளவோமேல். சுதந்திரமாம், சுதந்திரம்! யாருக்கப்பா?" என்பதாக. இருநூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி வைத்த ஒரு 'கோர சொரூபம்' நம்மைவிட்டு ஓடியநாள் என்கிற அகமகிழ்வு இல்லை மக்களிடம்! ஜோதி—சர்க்கார் கட்டிடங்களில் ஜொலிக்கிறதேயொழிய மனிதனின் இதயத்தில் இருளும் கண்களில் ஏக்கமும்தான் தாண்டவமாடுகிறது. எவ்வளவு பெரிய விந்தையான காட்சி இது! 'ஒரு ஆதிக்கப்' ஒழிக்கப்பட்ட நாள் என்றால் அந்தத் தினத்தைப் பொன்னாள் என்று போற்றுவர், காட்டிலும் மேட்டிலும் நாட்டிலும் நகரிலுமிருப்போர். அவர்களது இதயம் பண்பாடும்! கைகள் தாளமிசைக்கும்!! இன்பகானம் எங்கும் நிறைந்துகிடக்கும். ஆனால் அது இல்லை, மக்கள் மன்றத்தில். 'உலக சுகாதாரதினம்' என்று சொல்லி, மாணவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்குவரே எப்போதாவது, அந்தளவுக்குக்கூட 'ஆகஸ்டு 15' ஒரு விழிப்பை உண்டாக்கவில்லை! சலிப்பைத் தந்திருக்கிறது!! காரணம் என்ன, இதற்கு? எந்தத் தலைவர்களை விடுதலை வீரர்களென பூமாலை போட்டு "ஜே! ஜே!" என்று மக்கள் வாழ்த்தினரோ அதே தலைவர்கள் இன்றும் இல்லாமலில்லை. போற்றிப் புகழப்பட்ட மஞ்சள் கட்சி மகத்துவ மிக்க கட்சி, இருக்கிறது. ஆனால், மக்கள் மன்றம், இன்று, அந்தக் கட்சியை நம்பவுமில்லை! அந்தக்கட்சித் தலைவர்களின் கூற்றுக்களை சந்தேகிக்க—மறுக்க—பொய் பித்தலாட்டம் என்று பெயரிட்டழைக்க—துவங்கியிருக்கிறார்களென்பது மட்டுமல்ல, இந்த 'இச்சகம் பேசிகளை' அரசியல் வானிலிருந்து அகற்ற வேண்டுமென சீறிக்கிளம்பவும் துவங்கியிருக்கிறார்கள். பாலாறு ஓடும்!—என்று கனவு கண்டவன், தாரத்தின் கண்களிலிருந்து பாயும் நீர் ஆற்றைத்தான் காண்கிறான். 'நம்ம சர்க்கார். மிக நல்ல சர்க்காரு!' என்று பாடவிரும்பியவன், 'காங்கிரஸ் சர்க்கார்—கபோதி சர்க்கார்' என்று கேலியும் வேதனையும் கலந்த குரலில் கூறுகிறான். சாதாரண பிரஜைமட்டுமல்ல, காங்கிரசிலே சுதந்திரப் போராட்டத்தின்போது கஷ்டநஷ்டங்களைச் சுமந்தோரெல்லாம் கூறுகிறார்கள். கூறிவிட்டு, சும்மாயிருப்பது சுகம், என்றில்லை அவர்கள்! எதிர்க் கூடாரத்திலே இருக்கிறார்கள். காங்கிரஸ் கரைகிறது! 'விடுதலை பெற்றோர் 'யாமே' என்று கூறிக்கொள்ளும், பெருமை கொண்ட ஒரு அரசியல் விடுதலை இயக்கம், இவ்வளவு விரைவில் 'தூ! தூ!!' என்று கேவலமாகப் பேசப்படும் காட்சியை எங்கும்கண்டிருக்கமுடியாது. காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தலைவர்களுக்கும், விடுதலை பெற்றோர் யாம்' என்று கூறிப் பூரிப்படையும், அருமையானசொல் கிடைத்தது. சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய பெருமையா, அது! அடிமைப்பட்ட நாட்டின் தளைகளை அறுத்த தவப்புதல்வர்கள் — என்கிற பட்டத்தைப் பெறுதல் சாமான்யமா?

அந்த ஒரு சொல்லிலே மறைந்து கிடக்கும் தியாகச் சம்பவங்களும், சரிதநிகழ்ச்சிகளும் இலேசானதல்லவே. அந்த அருமையான 'சொல்லை' தமது எனப்பெருமையுடன் கூறிக்கொள்ளும் வாய்ப்பை அவர்களுக்குத் தந்துவிட்டுப் போனான், வெள்ளையன! ஆனால்!! அடைய முடியாத பெருமை, கிடைக்காத கீர்த்தி பெற்றோரின் நிலை இன்று கேவலமாகக் கருதப்படுகிறது — மக்களால். மகிழ்ச்சியில்லை! குதூகலமில்லை! இன்பமில்லை! எதுவுமே இல்லை—எங்கும் 'இல்லை' 'இல்லை' என்கிற கூக்குரல் ஒவ்வொராண்டும் வளர்ந்து ஐந்தாவது படியில், உச்சநிலைக்கு வந்திருக்கிறது. பெறுதற்கரியபெருமையைப் பெற்றோர், தமது நாணயக்குறைவால், அதை இழந்துவிட்டனர். மமதை அவர்களுக்கு மாசு தேடித்தந்துவிட்டது! சுயநலத்தீ, அவர் தம் பெருமையைச் சாம்பலாக்கிவிட்டது! கொள்ளைலாபஎண்ணம், அவர்களது முகத்தை 'கருப்பு' ஆக்கிவிட்டது! எங்கும் ஊழல்—லஞ்சம்—சுயநலம்—லாபவேட்டை பணத்திமிர்—கூத்தாடுகிறது! கொக்கரிக்கிறது!! 'தாயின் காலில் விலங்குகளோ?' என்று, இந்தியாவை பாரதமாதாவெனப் படம் வரைந்துகாட்டி, கனல்பறக்க கர்ஜித்தோர், இன்று அந்தப்பாரத மாதாவுக்கு அருமையான பொன் விலங்கைப்பூட்டி வருகிறார்கள், வெள்ளையன் ஆட்சிவெளியேறிற்று! ஆனால் கொள்ளையன் ஆதிக்கம்? வெள்ளைக்கூடு, ஒடிந்து — ஆனால் அதன் ஆதிக்க உயிர்? இந்தமண்ணை விட்டு அகலவில்லை. பலப்பல இடங்களில் உலவிக்கொண்டே இருக்கிறது—சாதாரணமாக அல்ல; பெரிய பெரிய ஆலைகள் உருவில். அமெரிக்காவின் 'டாலர்' விலங்குகள் பெரிதாகவும் வலிவாகவும் இறுக்கி வருகின்றன. "கடன் கொடு" என்று கேட்பதும் 'பார்க்கலாம்' என்று கேலியோடு பதில் சொல்வதுமான கேவலம் வளர்ந்துவிட்டது. செஸ்டர்பௌல்ஸிடம் மண்டியிடுகிறார் இந்நாட்டின் முடிசூடா மாணிக்கமெனப் போற்றப்பட்டவர்! டில்லியின் கொள்கைகள் அமெரிக்கமாளிகையில் உருவாகிறது! என்றுகேலி பேசுமளவுக்கு, இந்த மண்ணின் கௌரவம் பலியிடப்பட்டு வருகிறது. வாழ்விலலை, மககளுக்கு! மானமும் பறிக்கப்படுகிறது!! எவ்வளவு வேதனைகலந்த விசித்திரம், இது.

வெள்ளையன் அந்நியன்—தராசு ஏந்திவந்தவன். பூசல்களாலும் பூசுரர்களின் தயவாலும் அரசுக்கோலேந்தும் வாய்ப்புப் பெற்றான். இமயமுதல் குமரிவரை பரந்து கிடக்கும் இம்மாபெரும் நிலப்பரப்பை ஆண்டான்—ஒரு இடத்திலிருந்த வண்ணம். அவனது 'தலைமை' இருந்த இடத்தை டில்லி தர்பார் என்று கேலிச்சொல் வைத்து அழைத்தனர், அன்று! அவன் வெளியேறினான் ஆனால் அரசபீடம், மாறவில்லை. அவன் அமைத்துவைத்துச் சென்ற டில்லி தர்பாரிலே. சுயராஜ்யத் தலைவர்கள் கொலுவீற்றிருக்கிறார்கள்-அவனைப் போலவே தாமும் தர்பார் நடத்த வேண்டுமென்ற தருக்கோடு இருக்கிறார்கள். தமது தர்பாருக்குப் புதுப் புது மோகனஸ்திரங்களைத் தருகிறார்கள்! அவைகளை யேந்தி அவர்தம் திருவடிகளே சரணம் என, 'பக்திப் போதை'க்கு ஆட்பட்டுக்கிடப்போர், திருவந்தாதி பாடுகிறார்கள். ஒரே நாடு! 'இந்திய மக்கள்' என்றெல்லாம், வாய் வலிக்கப்பேசுகிறார்கள். சாதாரணமாக அல்ல, தமது பகுதியிலிருந்து பலப்பல வழிகளில் பணத்தைக் காணிக்கை செலுத்திய வண்ணம் பாடுகிறார்கள், இதனை! எவ்வளவு கேலிக்கூத்து, இது? விழிக்கிறான், சுதந்திரம் கிடைக்குமென்று கோரியவன். "வியாபாரம்"—கேள்வி பிறக்கிறது. கண் முன்னே ஆமதாபாத் ஆலைகள் காட்சி தருகின்றன. "அதிகாரம்"—எண்ணுகிறான்; டில்லி, தென்படுகிறது! முன்னேற்றம்'—யோசிக்கிறான் சிறிது நேரம்—வளங்கொழிக்கும் வடநாடு தோன்றுகிறது! வாடும் இவனுள்ளத்தில் வறண்ட பாலைதான் நமது வாழ்க்கையென்கிற கேள்வி எழும்புகிறது—அலைகளைப் போல அடங்கி கிளம்புகிறது. சிந்திக்க சிந்திக்க கனல் பறக்கிறது கண்களில்! அந்நிய மொழி இருந்த இடத்தில் வடநாட்டுமொழி வருவதும், ஆங்கிலேயன் இருந்த இடத்தில் வட நாட்டான் வலைவீசி வருவதும், உள்ளத்தில் உரைக்க உரைக்க, அவனது உதடுகளைத்தாண்டி வார்த்தைகள் ஒலிக்கின்றன! "விடுதலைக்காகப் போராடினேன். ஒழிந்தான் அந்நியன் ஆனால் என் வாழ்வில் சுகமில்லை! என் தாய் மண் பாலையாகிறது டில்லி தர்பார் மாறவில்லை. அதே ஆட்சி முறை. வெள்ளையன் இருந்த இடத்தில் வடநாட்டான் வெள்ளைக்கு பதில் மஞ்சள் ஆதிபத்யம்! இதற்கோ, நான் உழைத்தேன்—உளுத்தேன். சுதந்திரம் என் மக்களுக்கில்லை. எங்கோயிருக்கும் டில்லி உத்திரவிடுவதாம்! அதை நான் ஏற்பதாம்!! ஏனிந்த நிலை? சுதந்திரம் யாருக்கு?" என்று, கேட்கிறான். பசியால் வாடும் அவனது வயிற்றிலிருந்து புறப்படும் [illegible] வார்த்தைகளை எவர்தான் அ[illegible]முடியும்? அர்த்தமற்ற வாதமா அவனுடையது? அவனது பரம்பரையின் புகழ் பாடம்சொல்லுகிறதே அவனுக்கு! எப்போது உருவானாள் பாரதமாதா'? என்று பிறந்தது 'இந்தியா' எனும் சொல்?—ஏகபூமி எனும் இந்தச் சொல் எப்படி இனிக்க முடியும், கூறுவோர் புலியாக இருக்கும் போது! எனவே, வாழ்விழந்து வதைபவன், வேதனையோடு டில்லியை அண்ணாந்து பார்க்கிறான்! டில்லி, கம்பீரமாக 'தர்பார்' நடாத்தும் காட்சியும், அந்த கம்பீரத்துக்குள்ளே மறைந்து கிடக்கும் சுயநலமும் சூது மதியும் தென்படுகிறது. இதைத் தாங்கிச் சகித்துக் கிடக்க அவனுள்ளம் இரும்பல்லவே! அவனும், புதுயுகம் அறிந்த மனிதன்தானே!! அதனால்தான், அவனது இதயம் எரிமலையாகி, "எனது நாடு எனதாகவேண்டும்', என்று, குரலெழுப்புகிறான். அகண்ட இந்து சாம்ராஜ்யம் அமைக்க விரும்பும் 'ப்ராந்த' சுபாவமுள்ளோரெனக் கூறித் திரிவோரின் ஏளனம், அவன் காதுகளில் ஒலித்தாலும், எள்ளி நகையாடிக் கொண்டே 'என்ன புது வாழ்வு!' என்று அடியெடுத்து வைத்தவண்ணம் நடந்துகொண்டு போகிறான், பச்சோந்திகள் பாஷை, கேட்டுக் கேட்டுப் பழகியவனாயிற்றே, அவன்! 'ஆகஸ்டு 15'ஐ நினைக்கும் போது விடுதலை விரும்பியான அவன் இதயத்தில் ஒரு பக்கம் ஆர்வமும், மற்றோர் பக்கம் ஆத்திரமும் மோதிக்கொள்கிறது. தனது

(2-ம் பக்கம் பார்க்க)

## வரவேற்பும்—படத்திறப்பும்

உடுமலைப் பேட்டை நகராட்சி மன்றத்தார் 12—8—52 அன்று தி. மு. க. பொதுச் செயலாளர் சி. என். ஏ. வுக்கு ஒரு வரவேற்பு அளித்தார்கள். வரவேற்புபசாரத்துக்குப்பின், நகர சபைத்தலைவரும் தி. மு. க. பிரமுகருமான காலஞ்சென்ற M. S. கனகராசன் அவர்களது உருவப் படத்தை தோழர் அண்ணாதுரை திறந்துவைத்தார்.

விற்பனையாகிறது:

| | | |
|---|---|---|
| மக்கள் தீர்ப்பு | ... | 0–8–0 |
| ஜெபமாலை | ... | 0–8–0 |
| சாது | ... | 0–8–0 |

அச்சில்
**வள்ளிநாயகியின் கோபம்**

**வெளிவந்துவிட்டது!**
சி. என். ஏ. தீட்டிய
**வாழ்க்கைப் புயல்**
3-ம் பதிப்பு] [விலை 12 அணா
பரிமளம் பதிப்பகம் 17-B. வரகுவாசல்தெரு காஞ்சிபுரம்.

வியாபாரிகளுக்கு 25o/o கழிவு உண்டு.
வி. பி. பி. இல்லை.
முன் பணம் அனுப்புக.
தபாற் செலவு தனி.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.